**Deposition of witness**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| O.S.No. | : | 163/2012 |
| Deposition of Witness for | : | PW1 |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | திரு.மாயப்பாண்டி |
| Father's name | : | லேட்.குமராண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 9th Day of February 2026.

**சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 3ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சிய ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது.

எனது தந்தை குமராண்டி மற்றும் 1ம் வாதி பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் (9 எண்ணிக்கை) **வா.சா.ஆ.1** வரிசையாக குறியீடு

செய்யப்படுகிறது. தாவா சொத்து சம்மந்தமாக எனது தந்தைக்கு வருவாய் துறையினர் அனுப்பிய நோட்டீஸ் (2 எண்ணிக்கை) **வா.சா.ஆ.2** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கு செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் (3 எண்ணிக்கை) **வா.சா.ஆ.3** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் (13 எண்ணிக்கை) **வா.சா.ஆ.4** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. 18.07.2003 தேதியிட்ட 4ம் பிரதிவாதி எனது தாயாருக்கு கொடுத்த காசோலை அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4ம் பிரதிவாதி தாக்கல் செய்த கேவியட் மனுவின் நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் பிரதிவாதிகளுக்கு 25.02.2012 தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் (4 எண்ணிக்கை) **வா.சா.ஆ.8** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.